**தலைப்பு 251 – விலை மதிப்பீட்டுத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 251 – விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 31 ஆந் திகதி தலைமை மதிப்பாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 404.00 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 391.43 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 12.57 மில்லியன் அதாவது 3.11 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 365.80 | 364.62 | 1.18 | 0.32 |
| மூலதனம் | 38.20 | 26.81 | 11.39 | 29.82 |
| மொத்தம் | 404.00 | 391.43 | 12.57 | 3.11 |

## 2.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக 20.03.02.09 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்காக ரூபா 54.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 53.05 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீட்டின் சதவீதமாக பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.03.02.09 | 54.00 | 53.05 | 0.95 | 1.76 |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

திணைக்களத்திற்குரிய 25101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 22.07 | 22.00 | 14.10 | 17.25 | 75.0 | 68.25 |

### 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்குரிய இணக்கக் கூற்றுக்காக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தின் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக வருமானக் குறியீட்டு இலக்கம் 20.03.02.09 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்காக வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் பணிப்பொறுப்புக்கள் என்பன கையளிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 396,583,596 ஆன வருமானம் நிலுவையாக இருந்தது. அந்நிலுவை வருமானம் 02 ஆண்டுகள் முதல் 07 ஆண்டுகள் வரையான காலவீச்சிலிருந்து இருந்து வந்த போதிலும், அந்நிலுவை வருமானங்களை அறவிடுவதின் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலைமையில் காணப்பட்டன.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

25101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 508,466 ஆக இருந்தது. அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 24

வருடங்கள் வரையான கால வீச்சிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

### 3.4 செயலாற்றல்

----------------------

2015 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மாகாண அலுவலகங்களுக்கு வெவ்வேறாக இலக்குகள் வழங்கப்பட்டிருந்தன. 09 மாகாண அலுவலகங்களினால் அவ்விலக்கு அடைவதன் செயன்முன்னேற்றம் 08 சதவீதம் முதல் 55 சதவீதம் வரையான வீச்சளவினை எடுத்திருந்தது. உத்தியோகத்தர்களை வேறு விசேட கடமைகளுக்காக ஈடுபடுத்தியமை, தீர்மானங்கள் மாற்றம் செய்வதற்கு நேர்ந்தமை, திட்டவரைபடங்களில் குறைபாடுகள் காணப்பட்டமை, உத்தியோகத்தர்களின் தொழில் துறை செயற்பாடு போன்ற தாக்கங்கள் காரணமாக 2015 ஆம் ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் இலக்கை நோக்கி அடைவதற்கு முடியாதிருந்ததாக தலைமை மதிப்பாளரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பிராந்திய அலுவலகளுக்கு இணைக்கப்பட்ட பதவியணியினருக்கு ஒப்பாக உழைக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது கூடிய வருமானம் உழைத்த மாகாண அலுவலகங்களுக்கு குறைவான பதவியணியினரொன்று இணைக்கப்பட்டிருந்தது. மொத்த பதவியணியினரில் கூடுதலானோர் இணைக்கப்பட்டிருந்த மாகாண அலுவலகங்களில் மிகவும் குறைந்த வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்தது. பாரிய நிலப் பரப்பை மேவுகை செய்து பேணிச்செல்லப்படுகின்ற மாகாண அலுவலகங்களில் ஏனைய அலுவலகங்களுக்கு ஒப்பாக கூடுதலான உத்தியோகத்தர் தொகுதியை ஈடுபடுத்துவதற்கு நேர்ந்திருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டில் அவ்வலயத்தினுள் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு நடவடிக்கைகளில் கருத்திற் கொள்ளக்கூடிய அளவொன்று வர்த்தகமல்லாத நிறுவனங்களுக்காக மேற்கொண்டமை, பொருளாதார ரீதியாக காணியின் பெறுமதி குறைந்த பெறுமதியொன்றை எடுத்தமையால் அவ்வாறு வருமானம் குறைவடைந்துள்ளதுடன், பிராந்திய அலுவலகங்களுக்காக உத்தியோகத்தர்களை இணைக்கும் போது மக்களுக்கு உயர்ந்த சேவையொன்றை வழங்கக்கூடிய வகையில் அவ்வாறு செய்யப்படுவதாக தலைமை மதிப்பாளரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------------------

திணைக்களத்திற்குரிய சட்டப் பிரிவினை நடாத்திச் செல்லும் வாடகை கட்டடிடத்தில் திணைக்களத்திற்குச் சொந்தமில்லாத காணி கையேற்றல் மீளாய்வுச் சபையும் நடாத்திச் செல்லப்படுகின்றன. அக்கட்டிடத்திற்காக ஆண்டினுள் ரூபா 1,248,357 ஆன வாடகை செலவினமொன்றும் ரூபா 58,693 ஆன மின்சாரச் செலவினமொன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அச்சபைக்காக செலவிடப்பட்ட செலவினத்தை உறுதிப்படுத்தி அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் மீதான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 86 | 52 | 34 |
| (ii) | மூன்றாம் நிலை | 365 | 342 | 23 |
| (iii) | இரண்டாம் நிலை | 149 | 125 | 24 |
| (iv) | ஆரம்ப நிலை | 94 | 94 | - |
| | மொத்தம் | 694 | 613 | 81 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டிலிருந்து உரிய நிறுவனங்களிடமிருந்து அங்கீகாரங்களை எதிர்பார்த்த சேவை பிரமாணங்களை இதுவரை அங்கீகரித்துக் கொள்வதற்கு முடியாதிருந்த காரணத்தினால் இவ்வெற்றிடங்களளை நிரப்புவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 694 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் 613 ஆகவும் வெற்றிடங்கள் 81 ஆகவும் இருந்தன. 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடு பயன்படுத்தாமல் சேமிக்கப்பட்டிருந்த போதிலும், அச்சேமிப்புக்கள் தொடர்பில் பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டமை தாக்கமளித்திருக்கவில்லை.